# இந்தியத் துணைத் தூதரகம்
**யாழ்ப்பாணம்**

****

**ஊடக அறிக்கை**

***<u>யாழ்ப்பாணத்தில் இந்திய கல்விக் கண்காட்சி 2019</u>***

இன்று (11.02.2019) காலை வலம்புரி hotel ல் நடைபெற்ற இந்தியக் கல்விக் கண்காட்சியினை வடமாகாண ஆளுனரின் பிரதிநிதியாகக் கலந்து கொண்ட வணக்கத்திற்குரிய யாழ் மாநகரசபை முதல்வர் திரு இமானுவேல் ஆர்னோல்ட் தொடக்கி வைத்தார். சிறப்பு விருந்தினர் கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், யாழ் இந்தியத் துணைத் தூதுவர் பாலச்சந்திரன், மற்றும் ஏனைய பேச்சாளர்கள் உட்பட 300ற்கும் மேற்பட்டவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

2. SAPE எனும் தனியார் நிறுவனம் யாழ் இந்தியத் துணைத் தூதரகத்துடனும் வடமாகாண கல்வி அமைச்சுடனும் இணைந்து முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் இத்தகையதோர் கல்விக் கண்காட்சியினை ஏற்பாடு செய்துள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 பல்கலைக்கழகங்கள் உட்பட 14 பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் இக் கல்விக் கண்காட்சியில் பங்குபற்றியிருந்தன. தேவையான கல்வி மற்றும் தொழில்சார் வழிகாட்டல்கள் மற்றும் தகுதியான மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களுடன் கூடிய உடனடி அனுமதிகள் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிலையங்களினால் வழங்கப்பட்டன. மாணவர்களுக்கு வீசா தொடர்பான வழிகாட்டல்கள் யாழ் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளால் நிகழ்வில் வழங்கப்பட்டன. தேவைப்படும் மாணவர்களுக்கு கற்கை நெறிகளைக் கற்பதற்கு முன்னரான ஆங்கில மொழிவிருத்திக்கான கற்கை நெறிகளும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்டன.

3. இக் கல்விக் கண்காட்சியானது இன்றும் நாளையும் காலை 10 மணி முதல் பிற்பகல் 6 மணிவரை வலம்புரி hotel ல் பயனாளிகள் பங்குபெற திறந்திருக்கும்.

4. நிகழ்வுடன் தொடர்புடைய புகைப்படங்கள் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.

****

பெப்ரவரி11, 2019.